செ.வெ.எண்: 327/2016 நாள்: 03.06.2016

**பத்திரிகைசெய்தி**

**கன்னியாகுமரிமாவட்டத்தில் உள்ளபொது இ-சேவைமையங்கள்**

**சனி (04.06.2016) மற்றும் ஞாயிறு (05.06.2016) இயங்கும்**

**மாவட்டஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப.,தகவல்**

******

கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் வருவாய்த்துறை சான்றிதழ்கள், சமூகநலத் திட்டத்திற்கான மனுக்கள் மற்றும் பட்டாமாறுதலுக்கான மனுக்கள் இணையதளம் வழியாக பெறப்பட்டுவருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் 156 பொது இ-சேவை மையங்கள் இயங்கி வருகின்றன.

கல்லூரிகளுக்கான மாணவர்கள் சேர்க்கை நடைபெறுவதால் மாணவர்கள் சான்றிதழ்களை விண்ணப்பிக்க ஏதுவாக சனி (04.06.2016) மற்றும் ஞாயிறு (05.06.2016) விடுமுறை நாட்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பொது இ-சேவை மையங்களும் இயங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் தங்களது குடியிருப்புக்கு அருகில் இயங்கி வரும் பொது இ-சேவை மையங்களிலேயே விண்ணப்பித்து பயன்பெற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.